## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகோலை முஸ்லீம் அனாதை இல்ல (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1983, மே மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, மே மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகோலே முஸ்லீம் அனுதை இல்ல (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[1983, மே மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 12/82
1504

**மாகோலே முஸ்லீம் அனுதை இல்லத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"மாகோலே முஸ்லீம் அனுதை இல்லம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென மாகோலேயில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : **முன்னுரை.**

சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.** 1. இச்சட்டம் 1983 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகோலே முஸ்லீம் அனுதை இல்ல (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**மாகோலே முஸ்லீம் அனுதை இல்லத்தைக் கூட்டிணைத்தல்.** 2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "அனுதை இல்லம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) மாகோலே முஸ்லீம் அனுதை இல்லத்தில் தற்போது உறுப்பினராகவுள்ள அத்தகையோரான அத்தனை ஆட்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படுபவருமான அத்தகைய வேறு ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) "மாகோலே முஸ்லீம் அனுதை இல்லம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தலும் ஆதலும் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விருப்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் திருத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.** 3. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இஸ்லாமிய ஷரியத்தின் கோட்பாடுகளுக்கிணங்க அருகதையுள்ள முஸ்லீம் அனுதைகளுக்கு அன்புகாட்டுதலும், அவர்களை ஆதரித்து வளர்த்தலும், காத்துப் பேணுதலும் ;

(ஆ) அத்தகைய அனாதைகளுக்கு சமய அறிவைப் புகட்டுவதன் மூலம் அவர்களிடையே இஸ்லாமிய வாழ்க்கை வழியை மேம்படுத்துதல்;

(இ) அத்தகைய அனாதைகளுக்குக் கல்வியளித்தல்;

(ஈ) அத்தகைய அனாதைகள் பயனீட்டும் ஊழியத்தைப் பெறும் வரை அத்தகைய அனாதைகளுக்கு வாழிடம் அளிப்பதற்கும் சேவையாற்றுவதற்கும் என, அனாதை இல்லங்கள், மனைகள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள், மருந்துச் சாலைகள், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்கள், பொதுநிலை வாழ்விற்குரிய பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை நிர்மாணித்தலும், பேணுதலும், முகாமை செய்தலும், தாபித்தலும், மேம்படுத்துதலும்;

(உ) அனாதை இல்லங்களையும் மனைகளையும் நிர்மாணிப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள கொடையாளர்களிடமிருந்து நிதிகளைச் சேகரித்தலும், அறக்கொடைகளையும், கட்டடப் பொருட்களையும் ஏற்றுக்கொள்ளுதலும்; அத்துடன்

(ஊ) மேலேயுள்ள குறிக்கோள்களின் அல்லது அவற்றுள் எவற்றினதும் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

**கூட்டுத் தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்புக் கணக்கொன்றை அல்லது வேறு கணக்கொன்றைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், (இக்கணக்கு, அத்தகைய ஏதேனும் கணக்கில் வைப்பிலிடப்பட்ட எவையேனும் பணத்தொகைகளின்மீது வட்டி திரளுதலை உட்படுத்தாதிருத்தல் வேண்டும்) அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

**கூட்டுத் தாபனத்தின் முகாமைச் சபை.**

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பதவிதாங்குநர்களையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவர்களும் அவ்விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களுமான வேறு ஆட்களையும் கொண்ட முகாமைக் குழுவொன்றினால், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் அனாதை இல்லத்தின் முகாமைக் குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழுவாக அமைதல் வேண்டும்.

6. (1) உறுப்பினர்களுக்கு ஆகக் குறைந்தது இரு வார அறிவித்தல் கொடுத்தும், அத்துடன் (சமுகமாகவிராதோர் உட்பட) அதன் உறுப்பினர்களில் மூன்றிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மைகொண்டும், அந்நோக்கத்துக்கென விசேடமாகக் கூட்டப்பட்ட ஏதேனும் பொதுக் கூட்டத்தில், உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது நீக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகளை நடாத்துதற்காகவும், அலுவல்களை நடாத்துவதிலான நடவடிக்கைமுறைக்காகவும், அத்துடன் வேறுவகையாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைப் பொதுவில் முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(2) கூட்டுத்தாபனத்தின் விதியெதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படக்கூடிய அதே முறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லோரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் உள்ள அனாதை இல்லத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமெனபதுடன், அனாதை இல்லத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும், அதற்குச் செலுத்தப்படற்பாலனவான பணங்களும் உதவுதொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும். *அனாதை இல்லத்தினால் செலுத்தப்படற்பாலவையும் அனாதை இல்லத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான கடன்கள்.*

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவரின் முன்னிலையிலன்றி, அல்லது தலைவர் இல்லாதவிடத்து ஒரு துணைத் தலைவரினதும் ஒரு கௌரவ கூட்டுச் செயலாளரினதும் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு இடப்பட வேண்டும் என்பது.*

9. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றல் உடையதாதல் வேண்டுமெனபதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, வாடகைக்குவிட, குத்தகை கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள *கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

முழுத் தத்துவத்துடன், (அத்தகைய ஆதனத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக்கும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்புகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்துக்கும் அமைய), இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபன விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தினால் செய்யப்படும் அசைவற்ற ஆதனத்தின் ஒவ்வொரு முன்னைப்பட்ட கொள்வனையும், விற்பனையும், கையாளுகையும் அல்லது பாரதீனமும் (குத்தகை அல்லது கொடுத்து மாற்றுகை உட்பட), அந்நோக்கத்துக்கென முறையாகக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் சமூகமளித்து வாக்களிக்கும் சபை உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு பெறப்பட்ட முகாமைச்சபையின் முன் அங்கீகாரத்துடன் மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.